**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

************

**<u>ஊடக அறிக்கை</u>**

## இந்திய உயர் ஸ்தானிகராலயம் நடத்திய

## <u>ஷங்கரின் சர்வதேச சிறுவர் போட்டிகள் – 2020</u>

சுவாமி விவேகானந்த கலாசார நிலையத்தினால் (முன்னாள் இந்திய கலாசார நிலையம்) வருடாந்தம் நடத்தப்படும் ஷங்கரின் சர்வதேச சிறுவர் போட்டிகள் இம்முறை 20 ஆவது முறையாக கடந்த 23 நவம்பர் 2019 அன்று நடைபெற்ற நிலையில் இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து இந்த போட்டிகளில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இலங்கையின் சகல பகுதிகளிலுமிருந்து 500 க்கும் அதிகமான இளம் ஓவியர்கள் இந்த போட்டிகளில் கலந்துகொண்டதை அடுத்து இந்த நிகழ்வுகளில் சிறுவர்கள் கலந்துகொள்வதை ஊக்குவித்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு உயர் ஸ்தானிகர் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டார் . இவ்வாறான போட்டிகள் நுணுக்கமான சிந்தனைகள் உருவாகுவதற்கும் சிறுவர்கள் புதிய சிந்தனைகள் மற்றும் திறன்களை பெற்றுக்கொள்வதற்கும் ஊக்குவிப்பாக அமைகின்றன.

“ எமக்குள்ள ஒரேயொரு வீடான பூமியை பாதுகாப்போம் ”, என்ற தலைப்பின்கீழ் இலங்கை முழுவதிலுமிருந்து வந்த சிறுவர்கள் ஓவியம் மற்றும் கட்டுரை ஆகியவற்றில் தமது திறமையை வெளிக்காட்டுவதற்கு இந்த போட்டி களம் அமைத்துக்கொடுத்தது.

மேலதிக தகவல்களுக்காக சுவாமி விவேகானந்த கலாசார நிலையத்தை , (முன்னாள் இந்திய கலாசார நிலையம்) 2684698 என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது <u>iccrcolombo2@gmail.com</u> என்ற இ மெயிலை தொடர்பு கொள்ளவும்.

*** ஷங்கரின் சர்வதேச சிறுவர் போட்டிகள் -2020 இன் வர்ணமயமான புகைப்பட்டங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன

கொழும்பு

23 நவம்பர் 2019